**பயிர்க் கடன் உடனே வழங்கக் கோரிக்கை**

First Published : 18 Jun 2011 01:07:41 PM IST

நீடாமங்கலம், ஜூன் 17: விவசாயிகளுக்கு உடனடியாக பயிர்க் கடன் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தபட்டுள்ளது.

இதுதொடர்பாக திருவாரூர் மாவட்ட தேமுதிக விவசாய அணிச் செயலர் எஸ். அன்பரசன் விடுத்த அறிக்கை: நிகழாண்டு பாசனத்துக்காக மேட்டூரிலிருந்து முன்கூட்டியே தண்ணீர் திறந்துவிடப்பட்டு, நடவுப் பணிகளில் விவசாயிகள் இறங்கியுள்ளனர். எனவே, ஏக்கருக்கு ரூ. 15,000 வீதம் பயிர்க் கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

**வண்ண மீன் வளர்ப்புக்கு மானியம்**

First Published : 18 Jun 2011 10:59:30 AM IST

தேனி, ஜூன் 17: தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டத்தில் தேனியாறு உப வடிநிலப் பகுதிகளில் வண்ண மீன் வளர்ப்புக் குளங்கள் அமைப்பதற்கு அரசு ரூ. 1.50 லட்சம் மானியம் வழங்குகிறது.

மீன் வளர்ப்பில் ஆர்வம் உள்ளவர்கள் வைகை அணையில் உள்ள மீன் வள உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன் வளம்) அலுவலகத்தில் நேரில் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பாசிப்பயறு சாகுபடியில் நாமக்கல் 4வது இடம்: கலெக்டர் குமரகுருபரன் பெருமிதம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2011,00:51 IST

நாமக்கல்: ""நாமக்கல் மாவட்டத்தில், இதுவரை, 7,000 ஹெக்டேரில் பாசிப்பயறு சாகுபடியாகியுள்ளது. இச்சாகுபடி மூலம், நாமக்கல் மாவட்டம் நான்காம் இடத்தில் உள்ளது," என, மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் தெரிவித்தார்.
நாமக்கல் மாவட்டத்தில், வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் பாசிப்பயறு சாகுபடியை, நவணி பள்ளிப்பட்டி, லக்கியம்பட்டி, தோட்டக்கூர்பட்டி, கோவிந்தம்பாளையம் ஆகிய கிராமங்களில், மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் ஆய்வு செய்தார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது: தமிழக அரசு, அதிகளவில் பயறு வகைகளை சாகுபடி செய்ய பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக, நாமக்கல் மாவட்டத்தில் மழை அளவு குறைவாக உள்ளதால், மானாவாரி சாகுபடி அதிகளவில் செய்யப்பட்டுள்ளது. இந்தாண்டு முதல் குறைவான முதலீட்டில் அதிக லாபம் தரக்கடிய பாசிப்பயறு சாகுபடி முறையை விவசாயிகள் அதிகளவில் மேற்கொண்டு வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் பயறு வகைப் பயிரை, 20 ஆயிரம் ஹெக்டேரில் விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். பயறு சாகுபடிக்கான முதலீடு விளக்கும் வகையில், வேளாண் துறையின் மூலம் பல்வேறு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. நாமக்கல் மாவட்டத்தில், இதுவரை, 7,000 ஹெக்டேரில் பாசிப்பயறு சாகுபடியாகியுள்ளது.

இந்த சாகுபடி, கடந்த ஆண்டைக் காட்டிலும், 1,000 ஹெக்டேர் அதிகமாகும். நாமக்கல் மாவட்டம், வறட்சி மாவட்டமாக இருந்தாலும், பாசிப்பயறு சாகுபடி மூலம் பசுமை மாவட்டமாக காட்சியளிக்கிறது. பாசிப்பயறு பயிரிடுவதில், நாமக்கல் மாவட்டம், நான்காம் இடத்தில் உள்ளது. இரண்டு ஏக்கர் பாசிப்பயறு மூலம், 50 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது. விவசாயிகளுக்கு தேவையான உரம், பூச்சி மருந்து பெறுவது குறித்து, வேளாண் அலுவலர்களை சந்தித்து உரிய ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.
தொடர்ந்து, நாமக்கல் உயிரியல் கட்டுப்பாடு ஆய்வகத்தை கலெக்டர் குமரகுருபரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, இந்த ஆய்வகத்தில் தயார் செய்யப்படும் உயிரியல் காரணிகள் மருந்து, மாவட்டத்திலுள்ள, 15 வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் இருந்து விவசாயிகளுக்கு வினியோகம் செய்வதற்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

பெரம்பலூர், அரியலூர், கரூர், வேலூர், திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில், உயிரியல் மருந்துகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. பயிர்களை பாதுகாக்க, உயிரியல் மையத்தில் தயார் செய்யப்படும் மருந்துகளை, விவசாயிகள் அவசியம் பயன்படுத்த வேண்டும் என, தெரிவித்தார். அதையடுத்து, 20 விவசாயிகளுக்கு, கைத்தெளிப்பான், இடுபொருட்களை கலெக்டர் குமரகுருபரன் வழங்கினார்.

வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) பிரபாகரன், துணை இயக்குனர் நடராஜன், வேளாண் அலுவலர்கள் சித்ரா, சதாசிவம் உட்பட பலர் பங்கேற்றனர்.

**உரிய விலைக்கு உரம் விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2011,00:37 IST

கோபிசெட்டிபாளையம்: உரங்களை உரிய விலைக்கு, ரசீதுடன் விற்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் கூட்டமைப்பு கோரியுள்ளது. கூட்டமைப்பு தலைவர் ராமசாமி, செயலாளர் வெங்கடாசலபதி ஆகியோர், வேளாண் அமைச்சர் செங்கோட்டையனுக்கு அனுப்பியுள்ள மனு: ஈரோடு மாவட்டத்தில் உரத் தட்டுப்பாட்டை நீக்க, 150 தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மூலம் 2,650 டன் உரம் வழங்கியதற்கு நன்றி. டி.ஏ.பி., உரங்களை கூட்டுறவு வங்கிகள் மூலமே பில் போட்டு உரிய விலைக்கு விற்க வேண்டும். நடவுப் பணி தீவிரமாகியுள்ள நிலையில், கூட்டுறவு வங்கிகளில் உரம் கிடைக்காமல், தனியார் கடைகளில் காம்ப்ளக்ஸ் மற்றும் டி.ஏ.பி., உரங்கள் மூட்டைக்கு 20 முதல் 80 ரூபாய் வரை அதிக விலைக்கு, பில் போடாமல் விற்கின்றனர். வேளாண் துறை மூலம் தரக்கட்டுப்பாடு அலுவலர்களை நியமித்து, தனியார் கடைகளில் உரம், பூச்சிமருந்து விற்பனையை கண்காணித்து, அரசு நிர்ணயித்த விலைக்கு, பில் போட்டு தர வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

**ஆடிப்பட்டத்தில் கடலை விதைக்க மழை வருமா?எதிர்பார்த்து காத்திருக்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2011,00:37 IST

கோபிசெட்டிபாளையம்: ஈரோடு மாவட்ட மானாவாரி விவசாயிகள், ஆடிப்பட்ட கடலை விதைப்புக்கு தென்மேற்கு பருவ மழையை எதிர்ப்பார்த்து காத்திருக்கின்றனர். ஈரோடு மாவட்டத்தில் 30 சதவீத நிலங்கள் ஆற்று பாசனத்தையும், ஏனைய நிலங்கள் நிலத்தடி நீர் மற்றும் பருவ மழையை நம்பியே விவசாயம் நடக்கிறது. ஆண்டுதோறும் ஜூன், ஜூலை மாதங்களில் பெய்யும் தென்மேற்கு பருவ மழையை நம்பி ஈரோடு மாவட்டத்தில் ஆடிப்பட்டமாக மானாவாரி நிலங்களான 40 ஆயிரம் ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுவது வழக்கம். எண்ணெய் வித்து பயிர்களில் முக்கிய இடத்தை வகிக்கும் கடலை கால் நடைகளுக்கு சிறந்த தீவனமாக மட்டுமின்றி, புண்ணாக்கு தயாரிக்கப்படுகிறது. தமிழகத்தில் திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், பொள்ளாச்சி, ஈரோடு ஆகிய பகுதிகளில் கடலை அதிகளவில் பயரிடப்படுகிறது. தென்மேற்கு பருவ மழை நம்பியே ஈரோடு மாவட்டத்தில் மானாவாரி நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. நடப்பாண்டு ஜனவரி முதல் ஜூன் முடிய சராசரி மழை அளவை காட்டிலும்

கோபி சுற்று பகுதியில் 366 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. சென்ற ஏப்ரல் மாதத்தில் மட்டும் 190 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது குறிப்பிடத்தக்கது. சென்ற 10 ஆண்டுகளில் இல்லாத வகையில் நடப்பாண்டு ஏப்ரலில் அதிக மழை பெய்துள்ளது. இந்த மழையை பயன்படுத்தி விவசாயிகள் மானாவாரி நிலங்களில் கோடை உழவு செய்து கடலை விதைப்புக்கு நிலங்களை தயார்படுத்தி உள்ளனர். கோபி, நம்பியூர், கூகலூர், வேளாண் விரிவாக்க மையங்கள் மூலமாக 100 டன் விதை கடலை விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்ய விதைப்பு முதல் அறுவடை காலம் வரை சராசரி 15 ஆயிரம் ரூபாய் செலவாகும். ஒரு ஏக்கரில் 300 முதல் 400 கிலோ கடலை மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. கேரளாவில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து மழை வெளுத்து வாங்குகிறதது. ஆனால், ஈரோடு மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை போதிய அளவு இன்னமும் பெய்யவில்லை. சென்ற 10 நாட்களாக கோடை போல் வெயில் சுட்டெரிக்கிறது. மழை நேரத்தில் மேகமூட்டம் காணப்படுகிறது. மழை இல்லாமல் வெப்பம் நீடிக்கிறது. மானாவாரியில் நிலக்கடலை விதைப்பு சீஸன். இதனால், மானாவாரி கடலை விவசாயிகள், தென்மேற்கு மழை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். ஜூலை 15 தேதிக்குள் பருவ மழை கை கொடுக்கும் பட்சத்தில் கடலை விதைப்பு பணியை மாவட்ட விவசாயிகள் ஆர்வமுடன் துவங்கி விடுவர்.

**தக்காளி ஜாம் தொழிற்சாலை துவக்க விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2011,01:00 IST

கிணத்துக்கடவு: கிணத்துக்கடவு பகுதியில் தக்காளி ஜாம் பேக்டரி கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.கிணத்துக்கடவு மற்றும் சுற்றியுள்ள செட்டியக்காபாளையம், நல்லட்டிபாளையம், வடசித்தூர், ஆண்டிபாளையம், கப்பளாங்கரை, சூலக்கல், சொக்கனூர், வீரப்பகவுண்டனூர், சொலவம்பாளையம் உட்பட 72 கிராமங்களில் 250 எக்டேர் பரப்பளவில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது.ஒவ்வொரு விவசாயிகளும் ஒரு ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்கின்றனர். நோய் தாக்குதல், கடும் பனி பொழிவு போன்றவைகளால், தக்காளி உற்பத்தி பாதிக்கப்படுகிறது.

உற்பத்தி அதிகமாக செய்யும்போது, தக்காளிக்கு விலை கிடைப்பதில்லை. இந்த நேரத்தில், ஜாம் தொழிற்சாலையிலிருந்து தினமும் கணிசமான தொகைக்கு தக்காளி கொள்முதல் செய்யப்படும் போது, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாது.இந்த தொழிற்சாலை துவங்கினால், இப்பகுதியில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இப்பகுதி விவசாயிகளும், பொதுமக்களும் இத்தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் இத்தொழிற்சாலை துவக்க வேண்டும் என

தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். இருப்பினும், இன்னும் தொழிற்சாலை துவக்கவில்லை.எனவே தற்போதுள்ள பொள்ளாச்சி எம்.பி., சுகுமாரும், கிணத்துக்கடவு எம்.எல்.ஏ.,வாக தாமோதரனும் தக்காளி ஜாம் தொழிற்சாலை துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2011,00:58 IST

கிணத்துக்கடவு:கிணத்துக்கடவு பகுதிகளில் தக்காளி நடவு செய்து வரும் விவசாயிகள் அசோஸ் ஸ்பைரில்லம் என்ற நுண்ணுயிரை தெளிக்க வேண்டும் என வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.கிணத்துக்கடவு மற்றும் இதைச்சுற்றியுள்ள 72 கிராமங்களில் உள்ள 600 ஹெக்டேர் பரப்பில் தக்காளி நடவு செய்வதற்கு விவசாயிகள் தயாராகியுள்ளனர். தக்காளி நாற்று நடவு செய்வதற்கு முன்பு, பாத்திகளில் உள்ள தக்காளி நாற்றுகளை எடுத்து, ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ அசோஸ் ஸ்பைல்லம், ஒரு கிலோ பாஸ்போ பேக்டீரியாவை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்த கரைசலில், வேர்பகுதியை நனைத்து, பின்பு நடவு செய்ய வேண்டும். இதனால் 20 சதவீதம் உரச் செலவுகளை குறைக்கலாம், என வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

**மானியத்தில் விதை கொள்கலன்**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2011,00:58 IST

ஆனைமலை:ஆனைமலை வேளாண்மைதுறை அலுவலகத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை கொள்கலன்கள் வழங்கப்படுகிறது.ஆனைமலை பகுதி விவசாயம் சார்ந்த பகுதியாக இருப்பதால் விவசாயிகளுக்கு மானிய விலையில் 3,500 ரூபாயில் விதை கொள்கலன்கள் வழங்கப்படுகிறது. தேவையான விவசாயிகள் வாங்கி பயன்பெறலாம். ஆனைமலை சுற்றுவட்டாரத்தில் தென்னை மரங்கள் அதிக அளவில் இருந்தாலும் நெல், மக்காச்சோளம், நிலக்கடலை, சோளம் போன்றவைகளும் ஓரளவு பயிரிடப்படுகின்றன. பயிரிடப்படும் சரியான பருவத்திற்காக விதைகளை சேமித்து வைக்க இந்த விதை கொள்கலன்கள் வழங்கப்படுகின்றன. விவசாயிகள் வேளாண்மை துறை அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம். இந்த தகவலை வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்

# குறைந்தது அமராவதி அணை நீர்மட்டம் மீன் குஞ்சுகள் இருப்பு வைப்பு தாமதம்

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2011,00:51 IST

உடுமலை:அமராவதி அணையின் நீர்மட்டம் போதிய அளவு இல்லாததால் இந்தாண்டு மீன் குஞ்சுகள் இருப்பு செய்வது காலதாமதமாகி வருகிறது.உடுமலை அருகேயுள்ள அமராவதி அணை 90 அடி கொள்ளளவு உடையது. அணையில் மீன்வளர்ச்சி கழகம் சார்பில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு வளர்க்கப்படுகிறது. கட்லா, ரோகு, மிர்கால் ரக மீன்குஞ்சுகள் அமராவதி அணையில் வளர்க்கப்படுகிறது.ஆண்டிற்கு 6 லட்சம் முதல் 8 லட்சம் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு வளர்க்கப்படுகிறது. தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் இருப்பு செய்யப்படும் மீன்கள் குறிப்பிட்ட அளவு வளர்ச்சிக்கு பிறகு பிடிக்கப்படுகிறது. மீன் பிடி பணிகளுக்காக ஒரு பரிசலுக்கு இரண்டு மீனவர்கள் வீதம் 12 யூனிட் ஈடுபடுத்தப்படுகிறது.கடந்தாண்டு நவ., மாதம் வடகிழக்கு பருவமழை காலத்தில் அமராவதி அணை நிரம்பியது. இதனையடுத்து, 2 லட்சம் மீன் குஞ்சுகள் மீன் வளர்ச்சி கழகத்தால் இருப்பு செய்யப்பட்டது.

அணையின் நீர் மட்டம் ஏப்., மே மாதங்களில் குறைந்ததால் மீன் பிடிப்பு அதிகரித்தது. சராசரியாக 250 கிலோ மீன் நாள்தோறும் கிடைத்து வந்தது.தென்மேற்கு பருவமழை கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் துவங்கியதால் அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. இதனால், வலையில் சிக்கும் மீன்களின் எண்ணிக்கை குறைந்தது. வழக்கமான ரகங்களை காட்டிலும் வாளை போன்ற ரக மீன்களே வலையில் சிக்கின. கடந்த இரண்டு நாட்களாக அதிக காற்று காரணமாக அணையில் வீசப்பட்ட வலைகள் இடம்மாறி மீன்பிடிப்பு பாதிக்கப்பட்டுள்ளது.இந்தாண்டு தென்மேற்கு பருவமழையையொட்டி அணையில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யும் பணி அணை நீர் மட்டம் போதிய அளவு உயராததால் காலதாமதமாகி வருகிறது.

ஆண்டுதோறும் ஜூன் முதல் இரண்டு வாரங்களுக்குள் அமராவதி அணையின் நீர்மட்டம் பருவமழையினால், 50 அடியை தாண்டும்.இந்தாண்டு பருவமழை குறித்த நேரத்தில் துவங்கியும், ஷட்டரில் நீர் விரயம் மற்றும் மறைமுகமாக ஒரு சில பகுதிகளுக்கு தண்ணீர் திறக்கப்பட்டதால் நீர்மட்டம் 50 அடியை இதுவரை எட்டவில்லை. இதனால், அணையில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்வது காலதாமதமாகி வருகிறது.மீன் வளர்ச்சி கழக அதிகாரிகள் கூறியதாவது:பவானிசாகர் அணையிலிருந்து மீன்குஞ்சுகள் பெறப்பட்டு அமராவதி அணையில் இருப்பு செய்து வளர்க்கப்படுகிறது.

தற்போது, நீர்மட்டம் மற்றும் இதர காரணங்கள் மீன் குஞ்சு இருப்பு செய்ய சாதகமான நிலையில் இல்லை. காலதாமதமாக மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படும்', என்றனர்.

**இயற்கை விவசாயமே நிரந்தர தீர்வு : கருத்தரங்கில் தகவல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2011,20:41 IST

காந்திகிராமம் : ""இயற்கையுடன் இணைந்த விவசாய முறைகளை கைவிட்டதால், விவசாயிகள் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது,'' என, வேளாண் துறை பேராசிரியர் ரங்கநாதன் பேசினார்.

திருச்சி மாவட்டம் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை உதவியில், துறையூர் நீர்வடிப்பகுதி சங்க பிரதிநிதிகள், சுயஉதவிகுழு பெண்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி காந்திகிராம பல்கலையில் வழங்கப்படுகிறது. துவக்க விழாவிற்கு மக்கள் நல மேம்பாட்டு அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார்.

நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணி உறுப்பினர் ரமேஷ் முன்னிலை வகித்தார். பயிற்சியை துவக்கி வைத்து, பேராசிரியர் பேசியது: இந்தியாவின் உணவு தேவையை விட 2 சதவீதம் மட்டுமே உற்பத்தி அதிகம் உள்ளது. அடுத்து வரும் நான்கு ஆண்டுகளில் உணவு உற்பத்தி 11 சதவீதம் குறையும் என, சர்வதேச உணவு கழகம் கணித்துள்ளது. விவசாய நிலங்களின் பரப்பு வேகமாக குறை ந்து வருவது ஆபத்தானது. இருக்கின்ற நிலங்களிலும் மண்வளத்தை அதிகரிக்க செய்வது அவசியம்.

செயற்கை ரசாயன உரங்களில் 20 சதவீதம் மட்டுமே பயிர்களை சென்றடைகிறது. மீதமுள்ளவை மண்ணில் தங்கி வளத்தை குறைக்கிறது. மண்ணில் இடப்படும் உரங்கள் ஆவியாகி காற்றில் கலப்பதால் ஓசோன் பலத்தை பாதிக்கிறது. முறையான பராமரிப்பு இல்லாததால் மண் அரிப்பும் அதிகரிக்கிறது. முன்னோர்கள் பின்பற்றிய இயற்கையுடன் இணை ந்த முறைகளை கைவிட்டதால் தான், விவசாயம் பின் தங்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் தற்கொலை உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்கின்றனர். இயற்கை விவசாய முறைகளை முழுமையாக பின்பற்றுவதால் உணவு பற்றாக்குறையை தவிர்க்க முடியும், என்றார்.

**மருத்துவ பயிர் நேரடி கொள்முதல் : விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2011,20:51 IST

திண்டுக்கல் : சாகுபடி செய்யும் மருத்துவ பயிர்களை அரசே நேரடியாக கொள்முதல் செய்யவேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் மருத்துவ பயிர்கள் 3000 எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது. இதில் ஏற்றுமதி தரம் வாய்ந்த பயிர்களான கண்வலி கிழங்கு, மருத்துவ கூர்க்கான், சோற்றுக்கற்றாழை ஆகியவை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இதுகுறித்த ஆலோசனை கூட்டம்

கலெக்டர் தலைமையில் நடந்தது. மருத்துவ பயிர்கள் சாகுபடி பரப்பு அதிகரித்தபோதும், இதற்கான நியாயமான விலை கிடைக்க, அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

"வெளி சந்தையில் விலை கிடைத்தபோதும், மருத்துவ பயிர்களின் உண்மையான விலையை தரகர்கள் தெரிவிக்க மறுக்கின்றனர். முறைப்படி ரசீது தருவதில்லை. இடைத்தரகர்களால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. நெல், கரும்புக்கு அரசு நேரடி கொள்முதல் மையங்களை துவங்கியுள்ளது போல், மருத்துவ பயிர்களுக்கும் கொள்முதல் மையங்களை துவக்க வேண்டும்,' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

**வாழையில் வாடல்நோய் தாக்குதல்: விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2011,00:18 IST

திருப்புவனம்:திருப்புவனம் பகுதியில் வாழையில் "திசேரியன்' எனும் வாடல் நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.திருப்புவனம் பகுதியில் நெல்லுக்கு அடுத்தபடியாக வாழை விவசாயம் பல நூறு ஏக்கர் அளவில் பயிரிடப்பட்டுள்ளது. திருப்புவனம்நெல்முடிகரை, பழையூர், திருப்பாச்சேத்தி, கலியாந்தூர், நயினார்பேட்டை உள்ளிட்ட கிராமங்களில் பயிர் செய்துள்ளனர். இங்கு சில மாதமாக நன்கு வளர்ந்த வாழையில் தண்டுப்பகுதி "திசேரியன்' எனும் வாடல்நோய் தாக்கியுள்ளது.

வாழை குலையில் நன்கு காய்கள் பிடித்து வளரும்போது, இந்நோய் தாக்குதலால் காய்கள் அனைத்தும் கருகி காய்ந்துவிடுகின்றன. பல ஆயிரம் செலவழித்து பலன் கிடைக்கும் சமயத்தில் வாடல்நோய் தாக்குதலால்விவசாயிகள் வருத்தத்தில் உள்ளனர். தோட்டக்கலைத்துறையினரும் அக்கறை காட்டாததால் இந்நோய் தீவிரம் அடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் கல்யாணசுந்தரம் கூறுகையில்,"வாழையில் வாடல்நோயை கட்டுப்படுத்த பெவிஸ்டின் 60 மி.கி.,மாத்திரைகள், சூடோமோனஸ் புளுரசன்ஸ் 50 மி.கி.,கார்பன்டசிம் கரைசல் 3 மி.லி., இதில் ஏதாவது ஒன்றை வாழைதண்டுப்பகுதியில் துளையிட்டு மருந்தை வைத்து களிமண்ணால் அடைக்க வேண்டும்.பயிரிட்ட 2,4,6வது மாதத்தில் இம்முறையை செய்தால் கட்டுப்படுத்தலாம்.

ஒருகிலோ சூடோமோனஸ் மருந்தை 100 கிலோ தொழுஉரத்துடன் கலந்து 15 நாட்கள் நிழலில் காயவைத்து மரத்திற்கு 2கிலோ வீதம், நட்ட 4 மாதத்தில் வைத்து கட்டுப்படுத்தலாம், "என்றார்.

**மழையால் பாதிக்கப்பட்ட உளுந்து, பாசிப்பயிர்களுக்கு ரூ.29 லட்சம் இழப்பீடு**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2011,02:00 IST

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் நடப்பாண்டில் மத்திய கூட்டுறவு பாங்க் மூலம் விவசாய கடன் 61 கோடி ரூபாய் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயிர் இழப்பீடு தொகை தற்போது 29 லட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கும் பணி துவங்கி இருப்பதாக மத்திய கூட்டுறவு பாங்க் தனி அதிகாரி பாண்டியன் தெரிவித்தார். தூத்துக்குடி மாவட்டத்தில் நடப்பாண்டில் கலெக்டர் செல்வராஜ் ஆலோசனையின் பேரில் மத்திய கூட்டுறவு பாங்க் சார்பில் விவசாயிகளுக்கு பல்வேறு கடன் வழங்க முடிவு செய்யப்பட்டு அதற்கான பணிகள் தீவிரமாக தனி அதிகாரி பாண்டியன் மேற்பார்வையில் நடந்து வருகிறது.இந்த பாங்க் மூலம் விவசாய பயிர் கடன், நகைக்கடன், நுகர்வோர் தனிநபர் கடன், மகளிர் சிறுவணிக கடன், சுய உதவிக்குழு கடன், அரசு ஊழியர் கடன் உள்ளிட்ட பல்வேறு கடன்களை அதிகமாக வழங்க முடிவு செய்யப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மத்திய கூட்டுறவு பாங்க் மூலம் விவசாயத்திற்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்து கடன் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து தூத்துக்குடி இணைப்பதிவாளர் மற்றும் மத்திய கூட்டுறவு பாங்க் தனி அதிகாரி பாண்டியன் கூறியதாவது; நடப்பாண்டிற்கு விவசாய கடன் 61 கோடி ரூபாய் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு 21 கோடி கடன் வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது விவசாயிகள் கேட்டவுடன் கடன் வழங்கும் வகையில் அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. தற்போது 658 விவசாயிகள் பயன் பெறும் வகையல் 4 கோடியே 75 லட்ச ரூபாய் விவசாய கடன் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து விரைவாக கடன் வழங்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. பயிர் இழப்பீடு : 2009-2010ம் ஆண்டில் கோவில்பட்டி பகுதியில் விவசாயிகள் பயிர் செய்த உளுந்து, பாசிப்பயிறு போன்ற பயிர்கள் இயற்கை சீற்றம் காரணமாக பாதிப்படைந்தது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு இன்சூரன்ஸ் மூலம் பணம் வழங்க வேண்டும் என்று தகவல் அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் தற்போது 28 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் பணம் வந்துள்ளது. இந்த பணம் பிள்ளையார்நத்தம், வெங்கடாஜலபும், நக்கலமுத்தன்பட்டி, குலசேகரபுரம், சிவலார்பட்டி ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு இழப்பீடு பணம் வழங்கும் பணி துவங்கியுள்ளது. இவ்வாறு பாண்டியன் தெரிவித்தார்.

**வெண்டை விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2011,00:43 IST

பொங்கலூர் :மார்க்கெட்டில் வெண்டை விலை உயர்ந்துள்ளதால், வெண்டை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.பொங்கலூர் பகுதியில், வெங்காயம், தக்காளிக்கு அடுத்தபடியாக, கணிசமான விவசாயிகளால் வெண்டை சாகுபடி செய்யப்படுகிறது. நடவு செய்த 45வது நாளில் அறுவடைக்கு வந்து விடுகிறது. அதன் பின், இரண்டு நாட்களுக்கு ஒருமுறை அறுவடை செய்யலாம். அறுவடையை தள்ளிப் போட்டால், காய்கள் முற்றி, வீணாகி விடும்.நாட்டு ரகங்கள், ஹைபீரீட் ரகங்கள் என்று இரண்டு ரகங்கள் இருந்தாலும், பெரும்பாலான விவசாயிகள் ஹைபீரீட் ரகங்களையே அதிகம் சாகுபடி செய்கின்றனர். வெண்டையில், நோய் தாக்குதல் என்பது மற்ற பயிர்களை காட்டிலும் மிக குறைவாகவே உள்ளது.வெண்டை காய்களை அறுவடை செய்வது, சற்று கடினமான பணியாக இருப்பதால், கூலி ஆட்கள் வேலைக்கு வர விரும்புவதில்லை. இதன் காரணமாகவே வெண்டை சாகுபடி செய்வதை பல விவசாயிகள் தவிர்த்து வருகின்றனர். ஒரு கிலோ வெண்டை 25 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இதற்கு தொடர்ந்து நல்ல விலை கிடைத்து வருவதால், வெண்டை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பசுந்தேயிலை வரத்து அதிகரிப்பு கொள்முதல் நிறுத்தத்தால் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2011,22:43 IST

ஊட்டி : நீலகிரியில் பெய்து வரும் மழையால், பசுந்தேயிலை வரத்து அதிகரித்துள்ளது; பல தனியார் மற்றும் கூட்டுறவு தொழிற்சாலைகளில் கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளதால், பல்லாயிரம் கிலோ தேயிலை வீணாகும் அபாயம் உருவாகி உள்ளது நீலகிரி மாவட்டத்தில், கோடை சீசன் முடிந்து பருவகாலம் துவங்கியுள்ளது. கடந்த இரண்டு வாரங்களாக தென்மேற்கு பவருமழை தொடர்வதால் காலநிலையிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டது. கோடை காலத்தில் 23 டிகிரி செல்சியசாக இருந்த அதிகபட்ச வெப்பநிலை, தற்போது சராசரியாக 18 டிகிரி செல்சியசாக குறைந்துள்ளது. இதனால், அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் கடும் குளிரான காலநிலை நிலவுகிறது. இது ஒரு புறமிருக்க, இந்த மழை பருவகாலத்தை நம்பி விவசாயம் செய்யும் மலை காய்கறி விவசாயிகளுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது. அதேவேளையில், பெரும்பான்மையாக உள்ள 65 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகளுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தி உள்ளது. மாவட்டத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 350 மி.மீ.,மழை பதிவாகி வரும் நிலையில், தேயிலை

தோட்டங்களில் பசுந்தேயிலை வரத்து அதிகரித்து வருகிறது. இதனால், மாவட்டத்தில் உள்ள தனியார் மற்றும் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு வரும் தேயிலையின் அளவு, சாதாரண நாட்களைவிட, இரு மடங்காக மாறி உள்ளது. பசுந்தேயிலை அதிகரிக்கும் காரணத்தால், கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை களின் உறுப்பினர்களுக்கு "கோட்டா' முறை அறிவிக்கப்பட்டு, சுழற்சி முறையில் தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. சில தனியார் தொழிற்சாலைகளில், இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தேயிலை கொள்முதலுக்கு, குறைந்த விலை அளிப்பதாகவும், வேறு வழியில்லாமல் விவசாயிகள் பசுந்தேயிலையை வினியோக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளதும், தொடர்ந்து வருகிறது. ஏற்கனவே, கடந்த 11 ஆண்டுகளாக பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை கிடைக்காமல், தள்ளாடும் சிறு விவசாயிகள் பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளனர். கல்வி நிறுவனங்கள் திறந்துள்ள நிலையில், பள்ளி கட்டடணம் உட்பட பிற செலவுகளை சமாளிக்க முடியாமல், அவதிப்படுகின்றனர். தேயிலை நகரம் எனப்படும் கோத்தகரியில் கந்துவட்டிக் காரர்களிடம் பல விவசாயிகள் சிக்கி உள்ளனர். இது குறித்து காங்கிரஸ் வக்கீல் அணியின் மாவட்ட செயலர் ரவிக்குமார் கூறியது: தேயிலை கொள்முதல் செய்யும் தனியார், கூட்டுறவு தொழிற்சாலைகள் நடைமுறைக்கு ஒத்துவராத காரணங்களை காட்டி கொள்முதலை கட்டுப்படுத்தி உள்ளனர். பல டன் தேயிலை வீணாகி உள்ளது. பல தொழிற்சாலைகளில் ஒரு வாரமாக தேயிலை கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது. பல்லாயிரம் ஏக்கர் பசுந்தேயிலை முற்றிய நிலையில், பறிக்கப்படாமல் வீணடிக்கப்பட்டுள்ளது. நீலகிரியில் ஏற்பட்டுள்ள இத்தகைய பொருளாதார நெருக்கடியை களைய, பசுந்தேயிலை அனைத்தையும் தொழிற்சாலைகள் கொள்முதல் செய்து, அதற்கான பணத்தை தர மாநில அரசு உத்தரவிட வேண்டும். இதற்கான மனுவை மாநில முதல்வர், சுற்றுலா அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி உள்ளோம்," என்றார்.

**சோளம் சாகுபடிக்கு மான்யம் : வேளாண் அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 17,2011,23:56 IST

கரூர்: "மாநிலத்தின் உணவு தானிய தேவையை கருத்தில் கொண்டு, உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்கவும், அரசு புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறது' என வேளாண் உதவி இயக்குநர் கவிதா தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: விவசாய நிலங்களில் 56 சதவீதம் மானாவாரி சாகுபடி நிலங்களே உள்ளது. இதனால் தீவிர தானிய மேம்பாட்டு திட்ட முனைப்பு மூலம், சிறுதானியங்களை உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ் (ஐ.என்.எஸ். ஐ.எம்.பி., திட்டம்), தாந்தோணி வட்டாரத்தில் 200 ஹெக்டர் பரப்பளவுக்கு சோளம் சாகுபடி செய்ய இலக்கு

நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையும் விவசாயிகளுக்கு உரம், பூச்சிமருந்து, உயிர்உரம், மண்புழு உரம், நுண்ணூட்டங்கள் போன்ற வேள ேண் இடுபொருட்கள், 3,000 ரூபாய் மானியத்தில் வழங்கப்படும். மேலு ம், திட்டத்தில் சேரும் விவசாயிகளு க்கு பயிற்சிகள் மற்றும் தொழில்நு ட்ப ஆலோசனைகள் வழங்கப்படும். தானிய மேம்பாட்டு திட்டத்தை பற்றி மேலும் விபரம் தெரிந்து கொள்ள வேளாண் விரிவாக்க மையம், தாந்தோணி அலுவலத்துக்கு நேரிலோ அல்லது 04324 - 255225 என்ற டெலிஃபோன் எண்ணிலோ தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

**கொள்முதல் மையங்கள் இல்லை ஒரு லட்சம் டன் நெல் தேக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 17,2011,22:33 IST

விருதுநகர்:விருதுநகர் மாவட்டத்தில் நெல் கொள்முதல் மையங்கள் அமைக்காததால், உற்பத்தியான ஒரு லட்சம் டன் நெல் விற்பனையாகாமல் தேக்கமடைந்துள்ளது.
ராஜபாளையம், வத்திராயிருப்பு, சேத்தூர் பகுதிகள் உட்பட மாவட்டத்தில் 11 ஆயிரம் எக்டேரில் கோடையிலும் நெல் விவசாயம் செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு ராஜபாளையம், சேத்தூர், வத்திராயிருப்பு பகுதிகளில் நுகர்பொருள் வாணிபக்கழகம் சார்பில், நெல் கொள்முதல் மையங்கள் அமைக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 70 கிலோ கொண்ட மூடைக்கு 810 ரூபாய் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்படும் என விவசாயத்துறை அமைச்சர் அறிவித்தும், விருதுநகர் மாவட்டத்தில் இதுவரை நெல் கொள்முதல் மையங்களை திறக்கவில்லை.

இதனால் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லுக்கு போதுமான விலை கிடைக்கவில்லை. 70 கிலோ கொண்ட மூடைக்கு 650 ரூபாய்தான் கிடைக்கிறது. இதிலும் வியாபாரிகள் சிலர் எடைகளில் முறைகேடு செய்து விவசாயிகளை ஏமாற்றுகின்றனர். விளைந்த நெல்லை ரோட்டோரங்களில் குவித்து வைத்துள்ளனர். இதனால் மாவட்டத்தில் ஒரு லட்சம் டன் நெல் தேக்கமடைந்துள்ளது.
தமிழக விவசாயிகள் சங்க செயலாளர் அம்மையப்பன் கூறுகையில், "" விவசாயத்துறை அமைச்சர் நெல் கொள்முதல் மையம் அமைக்கப்படும் என தெரிவித்தும் , அதிகாரிகள் தாமதம் செய்கின்றனர். நெல்லுக்கு விலை கிடைக்காமல் விவசாயிகள் தவிக்கின்றனர். அரசு நெல் கொள்முதல் மையங்களை திறக்க அரசு முன் வர வேண்டும், "என்றார்.

தினத் தந்தி

## நாடு முழுவதுமாக புதிய பண்ணைகள் உருவாகின்றன சீரான முன்னேற்றப் பாதையில் ஈமு கோழி வளர்ப்புத் தொழில்



பி கே கிருஷ்ணகுமார்

கொச்சி

ஈமு கோழி வளர்ப்பில் நாடு முழுவதுமாக ஆர்வம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. சீரான முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கும் இந்த தொழில் அண்மைக் காலம் வரை தமிழகம், ஆந்திரா ஆகிய தென்மாநிலங்களிலும், மகாராஷ்டிராவிலும்தான் பிரபலமாக இருந்தது. இப்போது இது வடமாநிலங்களிலும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது.

எண்ணெய் – தோல்

பஞ்சாப், குஜராத், அரியானா உள்ளிட்ட பல மாநிலங்களில் ஈமு கோழிப் பண்ணைகள் உருவாகத் தொடங்கியுள்ளன. ஈமு கோழியின் உடல் பாகங்கள் அனைத்தும் முழுமையாக வர்த்தக மதிப்பு கொண்டவையாக உள்ளன. இறைச்சி, முட்டை, எண்ணெய், தோல், எலும்பு அனைத்துமே தனித்தனி பயனைக் கொண்டுள்ளன. இதனாலும், முட்டைகளுக்கும், குஞ்சுகளுக்கும் நல்ல விலை கிடைப்பதாலும்

ஏராளமானோர் இத்தொழிலில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

ஈமு கோழி வளர்ப்புத் துறையில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த கோல்டன் ஈமு ஃபார்ம்ஸ் என்ற நிறுவனம் முதலிடத்தில் உள்ளது. நாடு முழுவதுமாக இந்நிறுவனம் 2,000–த்துக்கு மேற்பட்ட ஈமு பண்ணைகளைக் கொண்டுள்ளது. இந்தப் பண்ணைகளில் சுமார் 5 லட்சம் ஈமு கோழிகள் வளர்க்கப்படுகின்றன. வழக்கமான இறைச்சி, முட்டை விற்பனையுடன் தற்போது இந்நிறுவனம் சோதனை அடிப்படையில் பதப்படுத்தப்பட்ட இறைச்சி மற்றும் எண்ணெயையும் விற்பனை செய்ய தொடங்கியுள்ளது.

ஈமு கோழியிலிருந்து கிடைக்கும் எண்ணெய் பல்வேறு அழகு சாதனப் பொருள்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது. குஜராத் மாநிலத்திலிருந்து அதிக அளவு எண்ணெய் வாங்கப்படுகிறது என இந்நிறுவனத்தின் இயக்குனர் முசாஃபர் அலி தெரிவித்தார். அடுத்த சில ஆண்டுகளில் வளர்க்கும் கோழிகளின் எண்ணிக்கையை பன்மடங்கு அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

ஈமு கோழிக் குஞ்சுகள்

ஈமு கோழிக் குஞ்சுகளை வளர்ப்பதால் மட்டுமே பெரும் பயன் பெற முடியும் என இத்துறையைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர். “50 முதல் 100 ஜோடி ஈமு கோழி குஞ்சுகளுடன் பண்ணை ஒன்றை தொடங்கும் ஒருவர் இரண்டு ஆண்டுகளில், முட்டை மற்றும் குஞ்சுகள் விற்பனை மூலம் ஆண்டுக்கு ரூ.20 முதல் ரூ.25 லட்சம் வரை சம்பாதிக்க முடியும். தொடக்க நிலையில் பண்ணைக்கான கட்டமைப்பு மற்றும் குஞ்சுகளை வாங்கும் செலவினம் உள்பட சுமார் ரூ.50 லட்சம் முதலீடு செய்ய வேண்டியிருக்கும்” என்று மும்பையைச் சேர்ந்த சாமிஸ் ரியரிங் அண்டு ஃபார்மிங் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் சாமி தம்பட்கார் தெரிவித்தார்.

பதினோரு ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் தற்போது சுமார் 15,000 ஈமு கோழிகளை வளர்த்து வருகிறது. மகாராஷ்டிரா மாநிலத்தில் ஆறு குஞ்சு பொரிப்பு நிலையங்களில் 80 விவசாயிகள் பணிபுரிந்து வருகின்றனர். ஒரு முட்டையை ரூ.1,000–த்துக்கு வாங்குவதாகவும், மூன்று மாத ஈமு கோழிக் குஞ்சு ரூ.14,000 வரை விலை போகிறது என சாமி மேலும் கூறினார்.

முட்டையிடும் பருவம்

ஈமு கோழிகள் முட்டையிடும் பருவம் அக்டோபர் முதல் மார்ச் வரையிலான ஆறு மாத காலமாகும். இப்பருவத்தில் ஒரு கோழி 10 முதல் 15 முட்டைகள் வரை இடுகிறது. உயர்தர ரெஸ்ட்டாரன்ட்டுகளில் ஈமு கோழி இறைச்சி ருசிமிகு உணவுப் பொருளாக விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ இறைச்சியின் விலை ரூ.400 என்பது குறிப்பிடத்தக்கது. ஈமு எண்ணெய் ஒரு லிட்டருக்கு ரூ.2,500 வருவாய் ஈட்டித் தருகிறது.

# *ரபி பயிர்களுக்கான கொள்முதல் விலையை 30–70% உயர்த்த கோரிக்கை*



*பிரபா ஜெகன்னாதன்*

*புதுடெல்லி*

*நடப்பு ஆண்டு ரபி பருவத்தில் (அக்டோபர்–மார்ச்), பல்வேறு பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை (கொள்முதல் விலை) 30 முதல் 70 சதவீதம் வரை உயர்த்த வேண்டும் என சில மாநில அரசுகள் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளன.*

*மத்திய அரசு அண்மையில் கரீஃப் பருவ (ஜூன்–அக்டோபர்) பயிர்களுக்கான கொள்முதல் விலையை அறிவித்தது. அதில் முக்கிய பயிர்களுக்கான விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் உத்தரபிரதேசம், அரியானா, மகாராஷ்டிரா, கர்நாடகா போன்ற மாநில அரசுகளுக்கு இது திருப்தியளிப்பதாக இல்லை.*

*இந்நிலையில் ரபி பருவ பயிர்களுக்கு அதிக விலை கோரியுள்ளன. மேலும் கோதுமை ஏற்றுமதி குறித்து விரைந்து முடிவு எடுக்கும்படியும் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளன.*

*இரண்டு பெரும் விவசாய மாநிலங்களான உத்தரபிரதேசம் மற்றும் பஞ்சாபில் அடுத்த ஆண்டில் பொதுத் தேர்தல்கள் நடைபெற உள்ளன. அப்போது பயிர்களுக்கான ஆதரவு விலை என்பது பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் கொள்முதல் விலை நன்கு அதிகரிக்கப்பட வேண்டும் என இந்த மாநில அரசுகள் விரும்புகின்றன.*

*நடப்பு ஆண்டு கரீஃப் பருவத்திற்கு நெல்லுக்கான கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.80 உயர்த்தப்பட்டுள்ளது. பருப்பு வகைகளுக்கான விலை குவிண்டாலுக்கு ரூ.200 முதல் ரூ.400 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.*